மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-1995) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 9-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

117. 1993-94-ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை லிமிடெட்டின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

144. கோரிக்கை எண் 29 - சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

145. சமூக நலம் பற்றிய செயல்முறைத் திட்டம், 1995-96. (ஆங்கிலம்)

146. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (ஆங்கிலம்).

147. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ்).